DMCOURTKUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 652 /2021**

2025- ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22– ஆம் நாள் புதன் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | தொழில் | : | ஆசிரியர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பொன்னுசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | அத்தியூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 54/2025 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-

1. சோனாசலத்திற்கு அசலாம்பாள் மற்றும் சாலையம்மாள் என்ற இரு மகள்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அதில் சாலையம்மாளுக்கு கிடைத்த $2^{1/2}$ சென்ட் நிலத்தை தான் 29.01.1979 ல் எனது தந்தையை கார்டியனாக காட்டி எனக்கு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். சோனாசலத்திற்கு உரிய $4^{1/2}$ சென்ட்டில் அசலாம்பாளுக்கு $2^{1/4}$ சென்ட் சாலையம்மாளுக்கு $2^{1/4}$ சென்ட் என்றாலும் அதில் சாலையம்மாளுக்கு உரிய $2^{1/4}$ சென்டிற்கு பதிலாக $2^{1/2}$ சென்ட் என கூடுதலாக போட்டு எனக்கு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

2. அசலாம்பாளுக்கு பாத்தியப்பட்ட $2^{1/4}$ சென்ட் நிலத்தை அவரது மகள்களான மீனாம்பாள் மற்றும் மனோரஞ்சிதம் ஆகிய இருவருக்கும் தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தாத்தா அண்ணாமலைக்கு பிரிந்த $4^{1/2}$ சென்ட்டில் எனது தந்தை பொன்னுசாமிக்கு $1^{1/2}$ சென்ட், சிற்றம்பலத்திற்கு $1^{1/2}$ சென்ட், அய்யாதுரைக்கு $1^{1/2}$ சென்ட் பாக உரிமையுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா அண்ணாமலை எனது அப்பா பொன்னுசாமிக்கு தாவா சொத்து தொடர்பாக எந்தவிதமான எழுத்துபூர்வ ஆவணங்களும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

3. எனது அப்பா வீட்டிற்கு மூத்தவர் என்பதால் அவரது பெயருக்கு UDR ல் பட்டா மாற்றம் ஏற்பட்டதை வைத்துக்கொண்டு எனக்கு தவறாக கிரய பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் பாகமான $1^{1/2}$ சென்ட் நிலத்தை மட்டுமே எனக்கு எழுதி வைக்க எனது அப்பாவிற்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு $2^{1/4}$ சென்ட்டும் அசலாம்பாள் மகள் மீனாம்பாளுக்கு $1^{1/4}$ சென்ட்டும் மனோரஞ்சிதத்திற்கு $1^{1}4$ சென்ட்டும்,

பொன்னுசாமிக்கு 1 1/2 சென்ட்டும், சிற்றம்பலத்திற்கு 1 1/2 சென்ட்டும், அய்யாதுரைக்கு 1 1/2 சென்ட்டும், கூட்டு அனுபவத்தில் உள்ள சொத்தாகும் என்று சொன்னால் சரியல்ல.

4. எனது சித்தப்பா அய்யாதுரை எனது அப்பாவிடம் எந்தவிதமான கிரயமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சித்தப்பா எனது அப்பாவிடம் அவருடைய பாகத்தை பிரித்துக்கொடுக்குமாறு எனது அப்பாவிடம் கேட்டார். எனது சித்தப்பா அய்யாதுரையும் வெளிநாடு சென்றிருந்தார் என்று சொன்னால் சரிதான். எனது அப்பா தவறான பட்டாவை ஏற்படுத்திக்கொண்டு எனது பெயருக்கு மோசடியாக பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1 1/2 சென்ட்டிற்கு மேல் எனது அப்பாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. OS 652/2021 வழக்கானது தீர்ப்பாகவேண்டும் என்றாலும் OS 757/2021 வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

5. 02.02.2018 ல் எனது அப்பா எனக்கு எழுதி வைத்த கிரய பத்திரம் ரத்து செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண். 757/2021 ல் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC MUNICOURT, KUNNAM